# விளம்பரம்™

VLAMBARAM™

☎: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 08 APRIL 15, 1999



வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



❊ யூகோஸ்லவியா Vs ஸ்ரீலங்கா.... (பக்கம் 2)

❊ வீடு வாங்கும் போது வரி செலுத்த வேண்டுமா (பக்கம் 13)

❊ விபத்திற்குள் சிக்கிய கார் வாங்குபவர்களிற்கு..... (பக். 3)

❊ அதிபாரக் குத்துச் சண்டை வீரர்கள்... (பக். 6)

❊ புளூட்டோ, சூரியனின் ஒரு கோளாகுமா? (பக்கம் 9)

❊ இளவயதினரிற்காக பெரியவர்களைத் தண்டிக்கலாமா? (பக். 9)

❊ சாரதி பயிற்சி பெறுபவர்களின் கவனத்திற்கு? (பக்கம் 10)

❊ சிவாஜியின் வாழ்வில் பத்மினியின் பங்கு (பக்கம் 7)



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

MARKHAM / EGLINTON

(கலைமகள் புத்தக நிலையத்திற்குள்ளே)


## யோகர் சுவாமிகள் — ...ழத்துச் சிவயோக சுவாமிகள் அருளிய மணிமொழிகள்

*தொகுத்தளிப்பவர்: ஆசிரியர் - தம்பிப்பிள்ளை பாலசுப்ரமணியம்*

- ☞ நிவேதனம் செய்து சாப்பிடுதல் வேண்டும். ஓமகுண்டத்தில் அவிப்பாக மிடுவது போல உணவை உட்கொள்ள வேண்டும்.
- ☞ ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தெய்வம் பிரகிருதியே சக்தி.
- ☞ இன்பதுன்பமெல்லாம் முகிலைப்போல் வந்து போகட்டும்.
- ☞ தன்னை அடக்கியாளுதல் வேண்டும்.
- ☞ சமத்துவம் வேண்டும் (Balance)
- ☞ நாளைக்கு என்ன என்ன தேவை என்பதைப் பற்றி ஆலோசியாமல் இருத்தல் வேண்டும்.
- ☞ மகாத்மா காத்தியின் பின்வரும் சிறப்புக்களைப் பற்றி புகழ்தல்

அ. பற்றின்றிக் கருமம் செய்தல்
ஆ. பயமின்மை இ. தன்னையடக்கியாளல்

## சிந்தனைத் துளிகள்

- ☑ அதிபயனுள்ள சொத்து - பணிவு
- ☑ மிகப்பெரிய தவறு - விட்டுவிடுதல் / கைவிடுதல்
- ☑ மிகப்பெரிய தடை - அகங்காரம்
- ☑ அதிசிறந்த நிம்மதி - சிறப்பாக வேலையை செய்து முடிப்பது
- ☑ மிகவும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒருவர் - புகார் செய்பவர்/முறைப்பாடு செய்பவர்
- ☑ மிகவும் இழப்படைந்தவர் (Worst Bankruptcy) - ஆர்வத்தை இழத்தல்
- ☑ அதிகூடிய தேவை - பொது உணர்வு (Common Sense)
- ☑ மிகவும் கீழ்த்தனமான உணர்வு (meanest Feeling) - இன்னொருவருடைய வெற்றியில் மனம் வருந்துதல்
- ☑ அதிசிறந்த பரிசில் (Gift) - மன்னித்து விடுதல்
- ☑ அதிசிறந்த நேரம் - இறப்பு
- ☑ அதிசிறந்த அறிவு - கடவுள்

## உன்னை அறிந்தால்........

சிலர் வியாபாரங்களில் முன்னேறுவர், பலர் வியாபாரத் தொழிலையே விட்டு ஓடுகிறார்கள். இதற்கு என்ன காரணமாகலாம்.

போதியளவு திட்டமிடல் இல்லாததே முக்கிய காரணமாகும். மற்றைய காரணங்களும் இருக்கின்றன. அனுபவம், போதியளவு முதலீடு, தகுந்த முன்னேற்றப்பாதைகள். (Promotion)

எனவே வாழ்வில் முன்னேற திட்டமிடல் மிக முக்கியமாகும். எப்பொழுது வாழ்வில் இளைப்பாற வேண்டுமென இப்பவே திட்டமிடுங்கள்.....

✳ பதறாத காரியம் சிதறாது.
✳ சிந்திக்காத செயல் சீர்படாது.
சிந்தித்து செயல்படு
✳ செயல்பாடு முற்றுப்பெற சிந்தனையே சிறந்தது


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM

SINGAPORE CELLULAR



Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

# அறிவும் ஆக்கமும் (32)



*- விஜே குலத்துங்கம்*

அண்மையில் பத்திரிகைகளிலும், தொலைக் காட்சியிலும் யூகோஸ்லாவி யாவில் உள்ள கொசொவோ (Kosovo) மாகாணத்தில் நடைபெறும், அகதிகளின் இடப் பெயர்ச்சியும் NATO நாடுகள் யூகோஸ்லவியா மீது குண்டுகள் போடுவதையும் காணக் கூடியதாக உள்ளது. Kosovo அகதிகளை பல நாடுகள் பொறுப்பேற்கின்றன. கனடாவும் 5000 அகதிகளை விமானங்களை அனுப்பி, அவர்களை இங்கு வரவழைக்கலாம் போல் இருக்கின்றது. அவர்கள் இங்கு வந்து இறங்கியவுடன், விரும்பினால் அகதி அந்தஸ்து கோரலாம் என்றும் கோரினால் உடனடியாக ஏற்கப்பட்டு நிரந்தர வதிவிடவுரிமை கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலமை சிலகாலம் பிற்போடப்படலாம் எனத் தெரியவருகின்றது.

உண்மையாக கொசோவோவில் என்ன நடக்கின்றது, ஏன் அந்த நிலை உருவாகியது எனப் பார்ப்போம். 500 ஆண்டுகள் துருக்கியர்களின் ஆட்சிக்குப்பிறகு, 1912ம் ஆண்டு Kosovo விடுதலை பெற்று சேர்பியர் (Serbs) ன் கைக்குள் மீண்டும் சென்றது. 1929 ஆண்டு யூகோஸ்லவியா எனப் பெயரிடப்பட்ட நாடு ஸ்லோவினியா, குறொசியா, பொஸ்னியா, சேர்பியா, மஸிடோனியா, மொன்டிநீகிரோ ஆகிய ஆறு குடியரசுகளைக் கொண்ட ஒரு சமஷ்டி அமைப்பாக இருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் 1945ம் ஆண்டு யூகோஸ்லவியா, கம்யூனிஸ் நாடானது.

1974ம் ஆண்டு அல்பேனிய இனத்தவர்களை அதிகமாகக் கொண்ட Kosovo மாகாணத்திற்கு, சுயாட்சி கொடுக்கப்பட்டது. அல்பேனிய இனத்தவர்கள் முஸ்லிம்களாகவும், சேர்பியர் கிறிஸ்தவர்களும் ஆவர். 1981ம் ஆண்டு Kosovo விலுள்ள அல்பேனிய மானவர்கள் குறைவான வாழ்க்கைத் தரத்தைக் கண்டிக்கும் முகமாகவும், ஆக 12 வீதமானவர்களே வேலை வாய்ப்புள்ளார்கள் என்றும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதனால் Kosovo மாகாணத்திலுள்ள சேர்பியர் (Serbs) கொசொவோவை விட்டு வெளியேற நேர்ந்தது. 1987ம் ஆண்டு Slobodan Milosevic என்னும் தற்போதைய பிரதம மந்திரி ஆட்சியைப் பிடித்தார். 1989ம் ஆண்டு Kosovo விற்கு இருந்த சுயாட்சி இவரால் பறிக்கப்பட்டு அவரின் இராணுவ ஆட்சிக்கு கீழே கொண்டு வரப்பட்டது. கம்யூனிசம் விழுந்ததைத் தொடர்ந்து 1991ம் ஆண்டு ஸ்லோவேனியா, Slovenia, குறொசியா (Croatia), பொஸ்னியா (Bosnia) ஆகியவை தனி நாடுகளாக பிரிந்து சென்றது. Croatia விலும் Bosnia விலும் Serbs, Croats முஸ்லிம் இனத்தவர்களுக்கிடையே சண்டை மூண்டு இது 1995ம் ஆண்டு முடிவடைந்தது. இன்றைய Yugoslavia என்ற நாடு பெரிய பகுதியாகிய Servia மிகவும் சிறியதான Montenegro ஆகிய இரு குடியரசுகளைக் கொண்டதாகும். Kosovo வானது Serbia வில் உள்ள ஒரு மாகாணமாகும். Kosovoவில் 90% மானோர் அல்பேனிய இனத்தவர்களும் முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் 1992ம் ஆண்டு தாம் Kosovo வை Yugoslavia விலிருந்து பிரித்து, தனி நாடாக வேண்டுமென வாக்களித்தார்கள். அத்துடன் அல்பேனிய இனத்தவர்களின் சொந்த நாடான அருகிலுள்ள Albania வுடன் சேரவும் விருப்பம் தெரிவித்தார்கள்.

இதே 1992ம் ஆண்டில் Yugoslavia வின் Serbs இராணுவத்தினர் Bosnia விலுள்ள முஸ்லிம்களை ஆயிரக்கணக்கானோரைக் கொண்டு, Serbs ன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்து முஸ்லிம்களை விரட்டியடித்தார்கள். 1992 இறுதியில் அந் நாளைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ், Serbs இனத்தவர் Kosovo வை தாக்கினால் தண்டிக்கப்படுவார்கள் என எச்சரித்தார்.

1995ம் ஆண்டு Bosnia, Croatia, Serbia ஆகியவற்றின் தலைவர்களுக்கிடையில் யுத்தத்தை நிறுத்தும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது 1997ம் ஆண்டு Kosovo Liberation Army (KLA) என்னும் கிளர்ச்சி இயக்கம், Serbs ன் இராணுவத்தினரையும், பொலிஸாரையும் கொன்று, Serbs இனத்தவரை விரட்டியடித்தார்கள். 1998ம் ஆண்டு பெப்ரவரியில் பிரதம மந்திரி Milosevic இராணுவத்தினரை Kosovo விற்கு அனுப்பி KLA இயக்கத்தினரை வீழ்ச்சியடையச் செய்ய முயற்சித்தார். இதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பலநூறு அல்பேனிய இனத்தவர்கள் கொல்லப்பட்டார்கள்.

1999ம் ஆண்டு பெப்ரவரி 6 இலிருந்து 17ம் திகதி பிரான்சில் Kosovo அல்பேனிய இனத்தவர்களுக்கும், Serbs க்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் Serbs இனத்தவர்களின் பிரதிநிதிகள் NATO வின் இராணுவம் Kosovo விற்கு வருவதை எதிர்த்ததால், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை. ஆனால் அல்பேனிய பிரதிநிதிகள் ஒப்பந்தத்தை ஆதரித்தார்கள்.

மார்ச் 15ம் திகதி மறுபடியும் நடந்த பேச்சுவார்த்தையின் பின்னர் 18ந் திகதி Kosovo அல்பேனியர்கள் சுயாட்சிக்கு ஆதரவாகவும் NATO வின் 28,000 இராணுவம் சமாதானத்திற்காக Kosovo வரவும் இணங்கி கைச்சாத்திட்டார்கள். Serbs மறுத்தார்கள். பேச்சுவார்த்தை முறிவடைந்தது. மார்ச் 24ந் திகதி NATO ஆகாயமார்க்க தாக்குதலை ஆரம்பித்து, இன்றுவரை தொடர்கின்றது. இதே நேரத்தில் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையாக, அல்பேனிய இனத்தவர்களை Serbs கொண்டு அவர்களை விரட்டியடிக்க, 400,000 அதிகமான அல்பேனியர்கள் அண்டை இடங்களான Macedonia, Montenegno Albania ஆகியவற்றிற்க்கு இடம் பெயர்ந்தார்கள்.

Serbs இனத்தவரின் எண்ணப்படி, Kosovo தங்களின் நாடு, அல்பேனிய இனத்தவர்கள் தங்கள் இனத்தவர் வாழும் Albani விற்கு செல்ல வேண்டும் என்பதே அவர்களின் தீர்ப்பு. இது எமது நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு ஒத்ததாக இருக்கின்றது. யாழ்குடா நாட்டிலிருந்து பல லட்சக்கணக்கான மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்து கஷ்டப்பட்ட போது, அதைப் பற்றி அலட்டிக் கொள்ளாத மேற்குலக நாடு தற்போது Kosovo விற்காக கண்ணீர் வடிக்கின்றது. முன்னாள் அமெரிக்காவின் Secretary of State ஆக ஹென்றி கிஸிங்கர் CNN பேட்டியொன்றில், ஏன் அமெரிக்கா ஶ்ரீலங்கா விடயத்தில் தலையிடவில்லை என கேள்வியெழுப்பினார்.

மார்ச் 8 ந் திகதிக்குரிய Time சஞ்சிகையில் Johanna McGeary என்பவரின் கட்டுரையில், அவர் மேற்குலக நாடுகளின் தலையீட்டைப் பற்றி குறிப்பிடுகையில் சரியான நேரத்தில் சரியான இடத்தில், சரியான இயக்கத்தில் இருந்தால், வெளிநாடுகளின் உதவி கிடைக்கும். ஶ்ரீலங்காவிலுள்ள விடுதலைப் புலிகளே உங்களுக்கான நேரமும் காலமும் இன்னும் வரவில்லை. முன்னர் புறக்கணித்த Kurds இனத்தவரை பின்னர் சதாம் ஹ-செயினை தாக்குவதற்காக ஆதரித்தது. எனவே பொறுத்திருந்து பார்ப்போம்.

********************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை ***இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.***


புதிய நிர்வாகத்தின் கீழ்

**Markham / Sheppard** பகுதியில்

**NEW SPICELAND**

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 94

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | ■ |
| | ■ | ■ | | ■ | ■ | | ■ |
| | ■ | ■ | 3 | | 4 | 5 | |
| 6 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | ■ | 7 | | ■ | |
| 8 | | | 9 | | ■ | | 10 |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| | 11 | ■ | | | | | 12 |

**இடமிருந்து - வலம்**

1. பூமியின் மத்தியில் செல்லும் கோடு
3. மலை
6. அணிகலன் ஒன்று
7. தமிழரின் உணவில் ஒன்று
8. இலட்சியம்
10. பெண் (வல-இட)
11 தன்மைப் பன்மைச் சொல்(வல-இட)
12. செல்வம் மிக்கவள் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. தமிழீழத்தின் ஒரு ஊர்
2. குடிநீர் மருந்துக்கு உதவும் கொடி ஒன்று
4. ஒழுங்கு (கீழ் - மேல்)
5. சிறு வாய் உள்ள போத்தில்களை மூட உதவுவது (கீழ் - மேல்)
7. புயம்
9. மரம் வெட்ட உதவும்
12. மிகவும் திருப்தி (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் April 27, 99க்கு முன்னர் கிடைக்க வேண்டும்.

**Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ப | ரி | ம | லை | ■ | சி | ஊ |
| ந் | ■ | ■ | ■ | ■ | எ | ரு | து |
| த | ற் | செ | ய | ல் | ■ | ■ | ப |
| ர் | ■ | ப | ■ | ன | ■ | ■ | த் |
| ப் | ■ | ■ | ■ | அ | ந் | தா | தி |
| ப | ரீ | ட் | சை | ■ | ■ | லா | ■ |
| ம் | ■ | ■ | ரி | ■ | வே | ட் | கை |
| ■ | க | டு | வ | ன் | ■ | டு | வ |

**#93இல் வெற்றி பெற்றோர்**

1) L. அருணன், Donmills
2) Manimarn, North York


நியூ ஸ்பைஸ் லாண்ட்

5800 Sheppard Ave. E.

Unit#16 Scarborough, Ont.

அவித்து அரித்த மா **1lb .53¢ 40 lb** மேல் **Free Delivery**

- கொத்து ரொட்டிக்குரிய ரொட்டி
- **Patty - Rolls - Cutlets - Puddings**
- இடியப்ப **Machine**
- மின் தேங்காய் துருவி

**GI**

✆ (416) 288-8177


**E.Mail luxmy@gloimpex.com**

**Special Discount for Take-out / Restaurant & Caterers**

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing






**Repairs**
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING
>Railing > Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

## வாகனம் வாங்குவதில் இப்படியும் ஒருமுறை உண்டு என்றால் நம்புவீர்களா?



எனது Honda Sales அனுபவத்தினை வைத்து நான் எடுத்த சில முடிவுகளை நீங்கள் அறியும்போது உங்களுக்கே வியப்பாக இருக்கும். $18,500 பெறுமதியான வாகனம் ஒன்றை நீங்கள் $5000 வைப்பில் கொடுத்து (Down Payment) 48 மாதங்களுக்கு (4 வருடத்திற்க்கு) மாதாந்தக் கட்டணமாக $433 செலுத்தி நான்கு வருடங்களின் பின் அதனை நீங்கள் உரிமையாக்கிக் கொள்கிறீர்கள். அதாவது 4 வருடத்தின் பின்னர் உங்களுக்கு பணம் தேவை என்றாலோ அல்லது வாகனத்தை மாற்ற விரும்பினாலோ அதை $10,000 க்கு விற்று பணத்தை பெறலாம். (நான் இங்கு கூறுவது Hondo வாகனத்தை பற்றியது. ஏனெனில் Hondo இன் Re-Sale பெறுமதி மிகமிக மற்றைய தயாரிப்புகளை விட கூடுதலானது)

அதேவேளை வேறு சில விடயங்களையும் உங்களுக்கு கட்டாயம் நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் வாகனம் ஏதும் விபத்தில் சிக்கி திருத்தப்பட்டிருந்தாலும் அல்லது திருத்தப்படாவிட்டாலும் உங்கள் வாகனத்தின் விலை குறைவாகவே காணப்படும். அதாவது உங்கள் வாகனத்தின் விலை குறைந்து விடும். உங்களை வாகனத்தை யாரேனும் களவெடுத்து சென்று விட்டார்கள் என்று வைத்துக் கொண்டால் நடக்கப்போவது என்ன? காப்புறுதி தாபனம் உங்கள் வாகனம் அன்றைய திகதியில் என்ன விலைக்கு புத்தகவிலை (Book Value) காட்டுகிறதோ அதைத் தான் அவர்கள் உங்களுக்கு தரப்போகிறார்கள். இவைகளால் பெரும் நட்டம் அடையப்போவது யாரும் இல்லை உங்களை தவிர.

அதே வாகனத்தை Lease to Own முறையில் (0 Down) அதாவது எந்த பணமும் வைப்பில் இடாமல் வாங்கும் போது $333 மாதாமாதம் 48 மாதங்களுக்கு நீங்கள் செலுத்தப் போகிறீர்கள். 48 மாதங்களின் பின்னர் அந்த வாகனத்தை நீங்கள் உரிமையாக்கிக் கொள்ள நினைத்தால் $9,000 க்கு அதை உரிமையாக்கிக் கொள்ளப்போகிறீர்கள். அதேவேளை அந்த வாகனம் நீங்கள் பாவித்த கால-கட்டத்தில் ஏதும் விபத்தில் சிக்கி சேதமடைந்திருந்தாலோ அல்லது திருத்தி அமைக்கப்பட்டிருந்தாலோ அந்த வாகனத்தை நீங்கள் அந்தவிலை கொடுத்து வாங்குவது புத்திசாலித்தனமான காரியமாகாது. அப்படி ஒரு கட்டத்தில் அந்த வாகனத்தை திருப்திக்கொடுப்பது சிறந்த முடிவாகும்.

தற்போது நாம் Down போட்டு வாங்க இருந்த $5000 ஐயும் RRSP இல் போடுகிறோம் என்று எடுத்துக் கொண்டால் அந்த பணத்திற்கு மீள்வரியா (Tax Return) குறைந்தது $2000 எமக்கு கிடைக்கப்போகிறது. தற்போது எமது பணம் எனது கையில் $(5000 + 2000) = $7000 ஆக உள்ளது. அதனை விட இந்த $7000ம் 48 மாதத்திற்க்கும் வங்கியில் இருந்து வட்டியையும் நமக்கு சம்பாதித்துக் கொடுக்கப்போகிறது. அதே வேளை நாம் அந்த வாகனத்தை வாங்குவதற்க்கும் Lease ற்கும் இடையில் உள்ள மாதாந்த வித்தியாசம் ($433 - $333 =$100) $100 ஆகும். நாம் அந்த $100 ஐயும் 48 மாதத்திற்க்கும் வங்கியில் இரும்போது (48 X$100) $4800 ஐ 48 மாதக்கடைசியில் நமது வங்கியில் இருப்பது புரியும். அந்த தொகைக்கும் RRSP எடுங்கள் Tax Return $2000 கிடைக்கப் போகிறது. ஆக $6800 ஐ- மாதக்கட்டணத்தில் இருந்து மட்டும் பெற்றுள்ளீர்கள். தற்போது உங்களிடம் மொத்தமாக இருப்பது (6800 + $7000) = $13800. இந்த நான்கு வருடத்தில் உங்கள் பணம் வங்கியில் ஈன்ற வட்டியையும் கூட்டிப் பார்க்கப் போகும் போது கிட்டதட்ட உங்களிடம் $15,000ம் இருப்பது நிச்சயம். 48 வது மாதம் இது நடப்பது மிக நிச்சயமானது. எனக்கு அந்த வாகனத்தை (Full Cash) முழுப்பணமாக $9000 ஐ செலுத்தி வாங்கிவிட்டேன் என்று எடுத்துக் கொண்டால் ($15000 - $9000 = $6000) $6000 எனது வங்கியில் உள்ளது. அதாவது 48வது மாதம் நீங்கள் விரும்பிய வாகனமும் உங்களிடம் முழுவதும் சொந்தமான நிலையில் (Full Pay) அதேவேளை உங்கள் வங்கியில் உங்கள் பணம் $6000 ம் இருப்பது எவ்வளவு புத்திசாலித்தனமான விடயம். இதில் எந்த மாயமும் இல்லை மந்திரமும் இல்லை.

***தொடர்புகளுக்கு:- சோதீஸ் வேலை:(416)364-1116 அல்லது Cell(416)704 -1179***

*We are entering 8 th year service in Scarborough.*



# Better Work ... Less Money

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates


என். ரி. ஈ. ஒட்டோ இங்.

**NTE AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN




# TV & VCR






**ALL MAKES- TV'S, VCR'S**
**CAMCORDERS, STEREOS**
***MOST REPAIR DONE IN YOUR HOME***
**FAST SERVICE**

Pl Call.: **MAHENDRAN** B.Sc. Exp. Tech. **(416) 286-8990**

# ELECTRICAL REPAIRS



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ் - ☎ **261-6883**

# ஆரோக்கிய வாழ்வு (31)



- *N.* செல்வசோதி

## உடலையும் உள்ளத்தையும் ஒன்றிணைக்கும் யோகப் பயிற்சி

இன்றைய நாகரீக உலகில் மனிதன் இயந்திரம் போல தனது வாழ்க்கையின் போக்கினை மாற்றி வருகிறான். மனதில் தோன்றும் எண்ணங்கள் ஒருகோடி, உள்ளத்தில் எழும் ஆசைகள் பல கோடி அவற்றை அடைய உள்ளம் துடிக்கிறது. அதற்கு அவனது உடல் வளம் இடம் தர மறுக்கிறது. அவ்வாறு அடைந்ததைக் கூட அவனது உடலால் இயலாது ஏங்குகிறான். காலப் போக்கில் உடல் நோய் வாய்ப்படுகிறது. அதைத் தொடர்ந்து முதுமையடைகிறான். அடுத்தது மரண நிலைதான் மிச்சம் அப்போது தான் "நான் பிறந்து என்ன பயன்" என்ற உண்மை விளங்கும்.

இவ்வாறான துன்பங்களை இல்லாமல் செய்யும் வாழ்க்கை நெறியே யோகம். யோகப் பயிற்சி செய்ய இல்லறத்தைத் துறக்க வேண்டுமென்பதில்லை. இதனை எந்த நிலையிலும் எந்த வயதிலுள்ளவர்களும் செய்யலாம். இதனை பின்வரும் 5 நிலைகளில் பயில வேண்டும்.

1. சில முக்கிய ஆசனங்கள்
2. மூச்சுப் பயிற்சி என்னும் பிராணாயாமம்
3. உடலுக்கு உகந்த சைவ உணவு வகைகள்
4. சகல உடல் உறுப்புகளையும் தளர்த்தி பூரண ஓய்வு எடுத்தல்
5. தியானம் பயிற்சி என்னும் மனதை ஒரு வழிப்படுத்தும் பயிற்சி முறை

இந்த பயிற்சி முறைகளை அன்றாட வாழ்க்கையில் ஓரளவுக்காவது கடைப்பிடித்து வரும் போது

1. உடலுக்கு வரும் நோய்கள் யாவும் மனத்திலிருந்தே தோற்றுவதால் மனத்தை செம்மைப்படுத்தி நோயை நீக்க யோகம் உதவுகிறது.
2. யோகப் பயிற்சியை தினமும் செய்வதால் உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றிற்கு அமைதியைக் கொடுத்து புத்துணர்வுடன் செயல்பட வைக்கிறது.

இதனை வழிவழி வந்த சான்றோர்கள் இதனை வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்துச் சென்றார்கள். எனவே நாமும் இதன்படி பயிற்சி செய்து உடலையும் உள்ளத்தையும் செம்மைப்படுத்துவோம்.

யோகப் பயிற்சி மனித சமுதாயத்திற்கு என்ன செய்கிறது? இதனை யார் யார் செய்யலாம்? ஏன் செய்ய வேண்டும்? என்ற கேள்விகளுக்கு விடையை இங்கு காண்போம். யோகம் என்பது ஒரு உயர்ந்த நிலை உடலையும் உள்ளத்தையும் இணைப்பது ஆகும். ஜீவாத்மாவைப் பரமாத்மாவோடு ஒன்றுபடுத்துவதே யோகம் எனப்படும்.

**யோகம் ஏன் செய்யவேண்டும்.**

இதுபற்றித் திருமூலர் திரு மந்திரத்தில் கூறியதாவது "உடம்பினை அழுக்குடையது என எண்ணியிருந்தேன் ஆனால் இந்த உடம்புதனை இறைவன் உறையும், இடமாக கொண்டிருக்கிறான் என்பதனை அறிகிறேன். ஆகவே இவ் உடலை யோகப்பயிற்சி செய்து நல்ல உடலமைப்பைப் பெற வேண்டும் என்கிறார். இதனையே ஆதி சங்கரரும் வலியுறுத்துகிறார்.

**யார் யார் இதனைச் செய்யவேண்டும்.**

இதனை இளைஞர்கள், வயதானவர்கள், நோயாளிகள், முடியாதவர்கள் ஆகியோர் யோகப் பயிற்சியைச் செய்யலாம் என்கிறார் கடயோக குருவான ஸ்வத்ராமன்.

கடயோகத்தின் பிதாவான பதஞ்சலிமுனிவர் கூற்றுப்படி நாம் தினம் தோறும் யோகப்பயிற்சி செய்வதால் நல்ல வஜ்ஜிரம் போன்ற உடலமைப்பும், பிரகாசமான முகவடிவும், குரல் வளமும், ஒளி பொருந்திய கண்களும் நோயற்ற நல்லுடலும் கிடைக்கின்றன. நமது உடலிலுள்ள 72 ஆயிரம் நாடிகளும் சுத்தமடையச் செய்கின்றன.

உபநிடதத்தில் யோகப் பயிற்சிபற்றி அறிவுறுத்தப்பட்டிருப்பதாவது இலகுவான உடலும், தெளிந்த உள்ளமும் யோகப்பயிற்சி மூலம் ஒன்றிணைந்து செயல்படும் போது மனிதன் பூவுலகில் தேவரைப் போன்ற ஆனந்த வாழ்வு வாழ வழி வகுக்குமென்று கூறப்பட்டுள்ளது.


## யோகாசன வகுப்பு

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: **291-5853**



கிரகப் பொருத்தம் பார்த்தல்

3 4

சாதகக் குறிப்பு கணித்தல்

யோ கா சோ தி ட ம்




(416) 299-8361

ல

6

12

எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல்

சுபமுகூர்த்தம் கணித்தல்

பலன் பார்த்தல்

10 9



# Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

## நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அழூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
**Professional Photographer - கதிர்**

☎: (416) **750-8118**

*2425 EGLINTON AV. E. UNIT 3*
*KENNEDY/ EGLINTON, SCARBOROUGH*



Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO

☎ : 438-7746


## விஷேச போட்டி இல. 84

தமிழ் ஆண்டுகளின் பெயர்களில் 7ஐத் தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வெ | வ | ர் | ச | ர | கீ | ங் | ஆ |
| கு | தி | ம | ர் | து | ப | பி | ச |
| தா | ம | த | வ | ந் | ர் | ல | ன |
| னி | ச | ட் | தா | து | வ | ஹ | சு |
| ய | வி | கா | ரி | பி | தா | ரி | ப |
| ந | ள | க | ங் | பி | ர | மா | தி |
| ந் | ம் | ம | க | யு | ய | மி | சௌ |
| த | பி | ர | ப | வ | க | மு | ஸ்ரீ |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை May 12, 99 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 83ன் விடைகள்**

பூமி - அகிலம், காசினி, குவலயம், ஞாலம், புவி
அறிஞன்-- புலவன், கற்றோன், மேதை, சான்றோன், நிபுணன்
குழந்தை- மகவு, சேய், பிள்ளை, குழவி, சிசு
நெருப்பு- அக்கினி, அலை, கனல், தழல், தீ, தேயு

பரிசு பெற்றோர்: 1) ந. சுகந்தி, Mississauga
2) S. Rajaratnam, Etobicoke


**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம். பிள்ளையார் ரேடர்ஸ், விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

# இதயம் ஒரு இயந்திரம்

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)



**முக்கிய கவனிப்பு**

துடிப்புகளுக்கு இடையிலே பாதரசத்தை 80 மில்லி மீட்டருக்குக் கீழே இறங்கவிடாத அழுத்தம் இருக்கிறது. சாதாரணமாகச் சுருக்க அழுத்தம் 110 முதல் 150 வரையிலும், விரிவு அழுத்தம் 80 முதல் 95 வரையும் இருக்கும். சிலருக்கு இவை இந்த எல்லைகளை தாண்டி இருந்த போதிலும் அவர்களுடைய ஆரோக்கிய நிலை குலையாமலிருக்கலாம். நம்முடைய இரத்த அழுத்தம் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. அன்றாட வாழ்க்கை நிகழ்சிகளால் அது அடிக்கடி ஏறவும் இறங்கவும் செய்யும். நாம் படுத்திருக்கும் போது இருப்பதைவிட எழுந்து நடமாடுகையில் அதிகமாக இருக்கலாம். அச்சம், துயரம் முதலிய உணர்ச்சிகளால் அது 30 முதல் 60 எண் வரை ஏறலாம். அற்ப காரியங்களுக்கும் அது ஏறி இருக்கும். ஆனால் இதனால் கெடுதல் இல்லை.

**இருதயம் நின்று விடும்.**

இரத்தக் கொதிப்பின் காரணங்களும் அதன் பயனும் நன்கு தெரிந்துள்ளன. இருதயம் அதிக அமுக்கத்திற்கு உள்ளாகித் தொழில் செய்கிறபோது அந்த அளவுக்குத் தக்கபடி விரிந்து கொடுக்கவில்லை என்றால் அது நின்று விடும்.

**இரத்தக் குழாய்கள் வெடிக்கும்.**

இரத்தக் கொதிப்பு, இரத்தக் குழாய்களைத் தாக்கும். நமது இரத்தக் குழாய்கள் ரப்பரைப் போல நெகிழ்ந்துழலக் கூடியவை; ஆனால் நமக்கு வயதேற ஏற அவை சாதாரணமாக இந்த நெகிழ்ச்சித் தன்மையை அடைகின்றன. இரத்தக் குழாய்களுக்கு இந்த நெகிழ்ச்சித் தன்மை இருக்கும் வரையில் இரத்தக் கொதிப்பினால்கூட அவ்வளவாகக் கெடுதி ஏற்படாது. ஆனால் அந்தத் தன்மை கெட்ட பிறகு இரத்தக் கொதிப்பினால் ஏற்படும் அமுக்கத்தை தாங்க முடியாமல் அவை வெடித்தாலும் வெடித்து விடலாம்.

**இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள்**

இரத்தக் கொதிப்பு நோயினால் அவதிப்படுகிறவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கப் பழக வேண்டும். தங்களுடைய அசௌகரியங்களையும் கஷ்டங்களையும் மறந்து விடவேண்டும். மனக்கவலை, கலக்கம், பயம், பதற்றம், ஆகிய உணர்ச்சிகளுக்கு ஆளாகக் கூடாது. சந்தோஷம் புறம்பான விஷயங்களைப் பொறுத்ததல்ல. அது உள்ளிருந்து வருவது என்பதை மறந்துவிடக் கூடாது. போதிய அளவும் ஓய்வாக இளைப்பாற வேண்டும். அதிக நேரம் தூங்க வேண்டும். ஒழுங்காக வாழவேண்டும். சாப்பாட்டுக்கும் தூக்கத்திற்கும் மலக்கழி வுக்கும் குறித்த காலங்கள் இருக்கவேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். தினம் மலம் ஒருதடவையாகிலும் கழிய வேண்டும். இரண்டு தடவை போனாலும் நல்லதே. ஆனால் வயிற்றோட்டம் இருக்கக் கூடாது. நிறையத் தண்ணீர் குடிப்பதனாலும் பொருத்தமான உணவினாலும் பழங்களைச் சேர்த்துக் கொள்வதனாலும் மலம் ஒழுங்காகக் கழிந்தால் மிகவும் நல்லது.




நான் ஒரு வழக்கறிஞர் இல்லை


குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

அடுத்து செய்யவேண்டியது என்ன?




முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

பின் இவரை அழையுங்கள்...

எஸ்.கே. தீசன்
(416) 631-6322

YARLCAN
STEAM CLEANING



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்
மோகன்
Tel: 724-9085
Pager : 600 0335
Cell.: 721-9709

AIRPORT SERVICE & MOVING VAN



ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு
☎: (416) 759-0557

**தபால் வழி ஜோதிடக் கல்வி**

மூன்று காலங்களை முழுமையாக அறிந்திட உதவும் அற்புதக்கலையாம் ஜோதிடத்தை நாம் இறைவனையும் கிரகங்களையும் முற்கால தற்கால ஜோதிட மேதைகளையும் வணங்கி அருள் பெற்று ஆசீர் பெற்று இக்கலையை பல நூற்றுக்கணக்கான உதாரண ஜாதகங்களுடன் தபால் வழி கற்பிக்க முன் வந்துள்ளோம்.

இக்கலையைக் கற்றுக் கொள்ள விரும்புவோர் எமக்கு தபாலிடுக நாம் பூரண விபரங்களை தபாலில் அனுப்பி வைக்கின்றோம். மற்றும் ஜோதிட சம்பந்தமான தேவைகள் எதுவாயினும் தொடர்பு கொள்ளவும்.

K. VARATHALINGAM
31 ST. DENNIS DRIVE, #814,
NORTH YORK M3C 1G7
TEL: (416) 421-6030 (DONMILLS / EGLINTON)


**கனேடிய தமிழர் உதைபந்தாட்ட சங்கம்**

கனேடிய தமிழர் உதைபந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாக தெரிவும் ஏப்ரல் 24ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு எக்லிங்டன் அவனியு கிழக்கில் அமைந்துள்ள மிட் ஸ்காபரோ நிலையத்தில் நடைபெறும். இப் பொதுக்கூட்டத்துக்கு சகல விளையாட்டுக் கழக பிரதிநிதிகளும், ஆதரவாளர்களும் கலந்து கொண்டு சிறப்பான நிர்வாகம் அமைந்திட உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: அ. கணேஷ் (905) 672-0824

Place: On Eglinton Between Kennedy & Midland


TAMIL INSURANCE CLAIMS CONSULTANT

தமிழில் இலவசஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

- தகுந்த ஆலோசனை
- சட்ட உரிமைகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
- உரிய நஷ்டஈடு
- மற்றைய இழப்பீடு
- மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

ரவி நடராஜா (12 வருட கால அனுபவமுள்ளவர்)

தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401),
Toronto, Ont. M9N 1X7

# விளையாட்டுத் தகவல்கள் (28)

எஸ். கணேஷ்



உலகத்திலேயே யார் சிறந்த குத்துச் சண்டை **Champion??**

## World Boxing Champion??


**Evnder Holy Field? அல்லது Lennox Lewis?**

**BOXING**

உலகத்திலேயே லட்சோப லட்சம் ரசிகர்களை உள்ளடக்கியது இந்த குத்துச் சண்டை (Boxing) விளையாட்டாகும். உலகத்திலேயே உள்ள சகல Sports இலும் அதி கூடிய பணத்தை தனிப்பட்ட ஒரு வீரர் ஒரு ஆட்டத்தில் மட்டும் சம்பாதிப்பது இவ் விளையாட்டிலேயாகும். சில வருடங்களுக்கு முன்பு Mike Tyson, World Champion ஆக இருந்த பொழுது இவரே உலகில் அதி கூடிய பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர் ஆக இருந்தார். அச்சமயம் Mike Tyson (Boxing), Ronaldo (உதைபந்தாட்டம்), Schmaker (Car Race), Micheal Jorden (Basket Ball) ஆகிய வரிசையில் முதலிடத்தில் Boxing இருப்பதை காணக்கூடியதாக இருந்தது.

இவ்வளவு சிறப்பை பெற்ற இந்த விளையாட்டின் சரித்திரத்தில் 1999ம் ஆண்டு March 13ம் திகதி ஒரு கறை படிந்த வரலாறு எழுதப்பட்டது. உலகத்தில் சிறந்த Sports Man என வருணிக்கப்பட்ட முகமது அலி, மற்றும் சிறந்த Boxer களான George Foreman, Larry Holmes, Sugar Ray, Michale Moorer, Riddick Bowe இந்த வரிசையில் பல சிறந்த ஆட்டங்களை கண்டு களித்த குத்துச் சண்டை ரசிகர்களை தலைகுனிய வைக்கும் அளவிற்கு, "பணம் பாதாளம் வரை பாயும்" என்ற முதுமொழிக்கேற்ப எல்லோரும் அதிர்ச்சி அடையும் அளவிற்கு March 13ம் திகதி நடந்த போட்டி அமைந்து விட்டது.

உலகத்திலேயே Boxing இல் பல தரப்பட்ட வகைகள் உண்டு. உதாரணமாக:- Middle Weight (160 Pounds), Light Heavy Weight (175 Pounds), Heavy Weight ஆகிய பல Group களாக Weight ஐ பொறுத்து தரம் பிரிக்கப்படுகின்றது. இதில் Heavy Weight மட்டுமே (Unlimited). இதில் நிறையை கொண்டு தரம் வகுக்கப்படுவதில்லை ஆகையால் இது எல்லாவற்றிலும் பார்க்க முதலிடம் வகிக்கிறது. இப்படிப்பட்ட பல வகையான தரத்திலும் ஒவ்வொரு முறையும் 3 Champion கள் தெரிவு செய்யப்படுகின்றார்.



**1. WBA - World Boxing Association - Champion**
**2. WBC - World Boxing Commision - Champion**
**3. IBF - International Boxing Federation - "**

இம் மூன்று WBA, WBC, IBF தரத்தில் ள்ளவர்களுக்கும் அதற்குரிய அழைப்பில் Belt வழங்கப்படுகிறது. சிலவருடங்களுக்கு முன்பு WBA Champion என ஒருவர், WBC Champion என ஒருவர், இப்படியாக இவர்களுக்கிடையில் போட்டி நடைபெறுவது மிகக் குறைவு. ஆனால் 1989 ம் ஆண்டு WBA Champion Title - Mike Tyson இடம் இருந்து Buster Douglas பறித்தார். 1990 ஆம் ஆண்டு Buster Douglas இடம் இருந்து Evander Holy Field பறித்தார். பின்பு IBF Champion ஆன Riddick Bowe யை 1993 ஆம் ஆண்டு வென்று Evander Holy field - WBA, IBF ஆகிய இரண்டு Belt களையும் தன்னிடம் தங்க வைத்து கொண்டார். 1994 ம் ஆண்டு Michael Moorer இடம் இவ் இரண்டு Belt களையும் பறிகொடுத்தார். 1996ம் ஆண்டு Mike Tysonயை வென்று WBA Belt யை தனதாக்கினார். 1997 Micheal Moorer ஐ வென்று மீண்டும் WBA, IBF ஆகிய இரு Champion பட்டங்களையும் பெற்று இதுவரை இவ் இரு Title களையும் Evander தன்னிடம் வைத்துள்ளார். அதேபோல் பல வெற்றிகளை பெற்று WBC Title ஐ Lennox Lewis பல வருடங்களாக தன்னிடம் தங்க வைத்துள்ளார். உலகத்திலேயே முதல் தரமாக WBA, IBF Champion Evander Holy Field, WBC Champion - Lennox Lewis யையும் மோத வைக்க Boxing இலேயே தனிக்காட்டு ராஜா ஆன Don King அவர்களில் பெருமுயற்சியினால் இவ் இரு சிறந்த வீரர்களையும் மோதுவதற்க்கு ஒழுங்கு செய்தார். குத்து சண்டை ரசிகர்களுக்கெல்லாம் அளவு கடந்த மகிழ்ச்சி. ஒரு தரமான, முதல் தடவையாக இந்த மூன்று Belt க்குரியவர்கள் மோத இருப்பதை கண்டு களிக்கலாம் என்று. ஆனால் எல்லோர் வாயிலும் மண்ணைப் போடும் அளவிற்கு March 13 நடந்த போட்டி யில் நடுவர்களினால் வெற்றி தோல்வி இல்லை என அறிவிக்கப்பட்டது.

உண்மையிலேயே இச் சண்டையை பார்த்த ஒரு குழந்தை கூட சொல்லும் யார் வெற்றி பெற்றுள்ளார்கள் என்று. ஆனால் நம்பமுடியாத அளவு நடுவர்கள் தீர்ப்பு அமைந்து விட்டது. Holy field க்கும் Lewis க்கும் நடைபெற்ற போட்டியில் வெற்றி தோல்வி இல்லை என கூறி Re-Match விளையாடுவதற்கு அதாவது Don King இன்றும் பல லட்சங்களை சம்பாதிப்பதற்கு பல ரசிகர்களின் அதிருப்தியை சம்பாதி கொண்டு, பணம் மூலம் எதுவும் சாதிக்கலாம் என்று நிரூபித்து விட்டார். இவ் இருபதாம் நூற்றாண்டில் மற்றைய விளையாட்டுகளில் பணம் பாய்வதைப் போல் Boxing இல் இப் பணம் தன வேலையை காட்டி விட்டது. இப் போட்டியில் 3 நடுவர்கள் அமர்த்தப்பட்டார்கள். WBA நடுவராக Stanly Christodoulou வும், IBF நடுவராக Eugenia Williams மும் WBC நடுவராக Larry O'Connel பங்கு பெற்றார்கள். Stanly அவர்கள் கொடுத்த புள்ளிகள Holy Field - 113, Lewie 116. Eugenia அவர்கள் கொடுத்த புள்ளிகள் Holy Field 115, Lewis 113. Larry அவர்கள் கொடுத்த புள்ளிகள் Holy Field 115, Lewis 115. இவர்கள இருவரும் 12 Round கள் மோதினார்கள்.

இதில் Computer இன் கணிப்பின்படி கொடுக்கப்பட்ட குத்துக்கள் (Punches Connected)

| | 1st | 2nd | 3rd | 4th | 5th | 6th | 7th | 8th | 9th | 10th | 11thy | 12th | | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Lewis- | 16 | 26 | 38 | 23 | 43 | 22 | 33 | 30 | 29 | 31 | 25 | 32 | = | 348 |
| Holy Field - | 7 | 1 | 21 | 9 | 22 | 11 | 8 | 13 | 12 | 21 | 9 | 9 | = | 130 |

மேற்குறிப்பிட்ட தரவுகளை பார்த்தால் யாரும் அடையாளம் காணலாம். Lewis தான் இச் சண்டையில் வெற்றி பெற்றார் என்று. ஆனால் அமெரிக்கன் நடுவர் ஆன Eugenia அவர்கள் கொடுத்த புள்ளிகளோ நேர் மாறாக உள்ளது. இவர் கொடுத்த புள்ளிகளை யாருமே நம்பவில்லை, அத்துடன் பல TV, Newspaper இதை கண்டித்து அறிக்கை விட்டுள்ளனர். இதற்கு ஒரு படி மேலாக New York State Govener, State Atheletic Commission க்கு. இச் சண்டையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்யும் படி உத்தரவிட்டுள்ளார். இவற்றை எல்லாம் பார்க்கும் போது மிகுதியில் ஏமாற்றப்படுபவர்கள ரசிகர்களே என்பது கவலைக்குரிய விடயமாகும்.

Lewis Holy fieldம் 6 மாத இடைவெளியில் மீண்டும் மோத இருக்கிறார்கள் எதிர்வரும் போட்டியில் யார் உண்மையான Champion என்பது தெரிந்துவிடும். இவ்இரு வீரர்களின் விபரங்களையும் இனி பார்ப்போம்.

**Lennox Lewis:** இவர் இங்கிலாந்து நாட்டில் பிறந்தவர். சிறு வயதிலேயே கனடாவிற்கு வந்து குடியேறிய இவர் Brampton இல் வசித்து வந்தார். 1988ம் ஆண்டு Soeul Olympics இல் Boxing இல் Gold Medal Canada விற்கு பெற்றுக் கொடுத்தவர். பின்பு இங்கிலாந்து நாட்டிற்கு மீண்டும் குடியேறி தற்போது அங்கு வசித்து வருகிறார். கடந்த பல வருடங்களாக IBF Champion Belt இவருடன் இருந்து வருகிறது. இவர் இதுவரை 36 Heavy Weight போட்டிகளில் கலந்து கொண்டு 34 இல் வெற்றியும், ஒன்றில் தோல்வியும், ஒன்றில் வெற்றி தோல்வி இன்றியும் உள்ளார்.

**EVANDER HOLY FIELD:-** பல முன்னணி வீரர்களை எல்லாம் விழுத்தியவர். 1991 இல் Geroge Foreman, 1992இல் Larry Holmes, 1993ல் Riddick Bowe, 1996 இல் Mike Tyson, 1997 இல் Michael Moorer ஆகிய எல்லோரையும் வெற்றி கண்டவர். 1992இல் Riddick Bowe இடமும், 1994 ல் Michael Moorer இடமும் தோல்வி கண்டும் மீண்டும் அவர்களை வெற்றி கொண்டார். 1997 இல் இருந்து இன்று வரை WBA, IBF Champion Belt களை வைத்திருப்பவர் . இதுவரை 40 Heavy Weight போட்டிகளில் 36 வெற்றிகள் 3 தோல்விகள் ஒரு வெற்றி தோல் வி இன்றி உள்ளார்.


**நியூ ராஜன் சலூன்**

உங்கள் அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த
நகரில் புதியதோர் நிறுவனம்



✂ பெரியவர்கள் - **$9.00**
✂ சிறுவர்கள் - **$7.00**
✂ வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு

செவ்வாய் - ஞாயிறு வரை **10:30Am-8:00Pm**
ராஜா - ✆ : **(416) 741-1049**
**Pager (416) 739-2393**
5010 Steeles Ave. W., #19, (Kipling/Steeles)

**நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்**

**செறண்டிப்**

**(F) பிறஸ் மார்க்கட்**



நாளாந்த பாவனைக்கு
தேவையான சகல
பொருட்களையும்
நாளாந்தம் மலிவு
விலைகளில் ஒரே
இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
இடம்



**SERENDIB FRESH MARKET**

**Tel: (416) 269-9913**

2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2

**கலைமகள்**
**புத்தக நிலையம்**

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
**CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

**துரித பணமாற்றுச் சேவை**

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E. GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9,
Newin Centre Mall, Mississauga, Ont.
☎: (905) 306-0494

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*-தொகுத்துத் தருபவர் - பரம்*


'தாய் மகளுக்கு கட்டிய தாலி'

### 1959

1. அவள் யார் 2. அமுதவல்லி
3. அல்லி பெற்ற பிள்ளை 4. அழகர்மலை கள்வன்
5. அபலை அஞ்சுகம் 6. அதிசய பெண்
7. அருமை மகள் அபிராமி 8. உலகம் சிரிக்கிறது
9. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
10. எங்கள் குலதேவி 11. ஒரே வழி
12. ஓடிவிளையாடு பாப்பா 13. கலைவாணன்
14. கல்யாண பரிசு 15. கண் திறந்தது
16. கல்யாணிக்கு கல்யாணம் 17. காவேரியின் கணவன்
18. கூடிவாழ்ந்தால் கோடி நன்மை
19. சகோதரி 20. சிவகங்கை சீமை
21. சுமங்கலி 22. சொல்லுதம்பி சொல்லு
23. தங்கப்பதுமை 24. தலை கொடுத்தான் தம்பி
25. தாமரைக் குளம் 26. தாய் மகளுக்கு கட்டிய தாலி
27. தாயைப்போல பிள்ளை நூலைப் போல சேலை
28. தெய்வபலம் 29. தெய்வமே துணை
30. நல்ல தீர்ப்பு 31. நாலுவேலி நிலம்
32. நான் சொல்லும் ரகசியம் 33. நாட்டுக்கொரு நல்லவள்
34. பத்தரைமாத்து தங்கம் 35. பாகப்பிரிவினை
36. பாக்யதேவதா 37. பாஞ்சாலி
38. பாண்டித் தேவன் 39. பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்
40 புதுமைப்பெண்
41. பெண்குலத்தின் பொன் விளக்கு
42. பொன்னு விளையும் பூமி 43. மஞ்சள் மகிமை
44. மரகதம் 45. மணிமேகலை
46. மனைவியே மனிதனின் மாணிக்கம்
47. மாதவி
48. மாலா ஒரு மங்கல விளக்கு 49. மாமியார் மெச்சிய மருமகள்
50. மின்னல் வீரன்
51. யானை வளர்த்த வானம்பாடி
52. ராஜசேவை 53. ராஜாமலைய சிம்மன்
54. வண்ணக்கிழி 55. வாழ வைத்த தெய்வம்
56 வாழ்க்கை ஒப்பந்தம்
57. வீரபாஸ்டிய கட்டபொம்மன்* (* வர்ணபடம்)

1959ம் ஆண்டு மொத்தமாக 57 தமிழ்ப் படங்கள் வெளிவந்தன. 1931ம் ஆண்டிலிருந்து தமிழ்ப்படங்கள் , வெளிவரத தொடங்கின. முதல்படமாக ஒரே ஒரு படமாக 'காளிதாஸ் ' 1931ம் ஆண்டு வெளிவந்தது. பின்பு இரண்டாவது வருடமாக 1932ம் ஆண்டு நான்கு படங்கள் வெளிவந்தன. இவ்வாறு வருடா வருடம் வெளிவரும படங்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. இதன் உச்சக் கட்டமாக கடந்த 29 வருடங்களில் இவ்வருடமே அதிகூடிய படங்களாக 57 தமிழ்ப்படங்கள் வெளிவந்தன. இது தவருடத்து சாதனையாகும். இந்த ஆண்டில் இன்னுமொரு முக்கிய விடயமாக எல்லோராலும் பார்த்து மகிழும் சிவாஜி நடித்த 'வீரபாண்டிய கட்டப்பொம்மன்' ம் வந்த ஆண்டு இதுவே.

இவ்வருடம் சிவாஜி 6 படங்கள் மட்டுமே நடித்தது குறிப்பிடத்தக்கது. அவை: தங்கப்பதுமை, நான் சொல்லும் ரகசியம், வீரபாண்டிய கட்டபொம்மன், மரகதம், அவள் யார் மற்றும் பாகப்பிரிவினை. இவ் வருடம் எம்.ஜி. ஆர் நடித்து வெளியாகிய ஒரே ஒரு படம் 'தாய மகளுக்கு கட்டிய தாலி'. 1959ம் ஆண்டு 57 படங்கள் வெளிவந்த போதிலும் ஜெமினி, சரோஜாதேவி, விஜயகுமாரி நடித்த கல்யாணப்பரிசு இவ்வருடத்திற்குரிய சிறந்த படமாக தென்னிந்திய சினிமா சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டது. விசேடப்பரிசு பாகப்பிரிவினை படத்திற்கு கிடைத்தது. இப்படத்தின் டைரக்சன் ஸ்ரீதர், இசை. **A.M.** ராஜா. இதுவே முதன்முதலாக வெளிவந்த முக்கோண காதல் கதையாகும். இப் படத்தின் முடிவும் வித்தியாசமாக இருந்தது. அதுவே இப்படத்தின் வெற்றிக்கும் காரணமாக அமைந்தது.!

* நாகேஷ் திரைக்கு வந்த ஆண்டு இதுவே. படம் "தாமரைக் குளம்" இருந்தபோதிலும் நாகேஷிற்கு பெயர் கொடுத்த படம் 'நெஞ்சில் ஒரு ஆலயம்'.
* எகிப்திய தலைநகர் கெயிரோவில் நடைபெற்ற திரைப்பட விழாவில் பரிசுபெற்ற படம் 'வீரபாண்டிய கட்டப்பொம்மன். கிழக்காசியாவிலே சிறந்த நடிகர் "சிவாஜி" என்றபெயர் பெற்றுக் கொடுத்த படமும் இதுவே.

*இதே ஆண்டு வெளிவந்த சிவகங்கைச் சீமை, நல்ல கதையமைப்பான படமாக இருந்த போதிலும் இதன் முக்கிய கதாபாத்திரம் ஊமைத்துரையினுடையது. இந்த ஊமைத்துரை வீரபாண்டிய கட்டப்பொம்மனில் ஒரு அங்கமாக வந்ததால் சிவகங்கைச் சீமை வெற்றி பெற முடியாத நிலைமை. இப்படத்தால் பழம்பெரும் நாட்டிய ஆசிரியை கமலா லக்ஷ்மன் கதாநாயகியாக நடித்தது குறிப்பிடத்தக்கது. இதே ஆண்டு சிவாஜி ஒரு கை ஊனமாக நடித்த படம் பாகப்பிரிவினை. இது ஒரு வெள்ளிவிழா கொண்டாடிய படம். கவிஞர் கண்ணதாசன் எழுதி முடித்த "தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தில் குறைவதில்லை... என்ற பாடல் ஆகக்குறைந்த நேரம் 3 நிமிடத்தில் எழுதப்பட்டது.

சிவாஜி திமுக விலும் கண்டதாசன் காங்கிரஸ் இலும் இருந்த காலம் இது. இந்த நேரத்தில் எழுதிய பாடல் சிவாஜியையும் கண்ணதாசனின் உறவை வெளிப்படுத்த தவற வில்லை. இவ்வாண்டு சிறந்த நடிகராக சிவாஜியும் (படம் பாகப்பிரிவினை) சிறந்த நடிகையாக பத்தினியும் (படம் தங்கப்பதுமை) தெரிவு செய்யப்பட்டனர். (தொடரும்)

***தவறிற்கு வருந்துகின்றோம்:*** கடந்த இதழில் நாடோடி மன்னனில் நடித்த கதாநாயகிகள் மூவர் எனவு, அதில் நடித்தவர்கள் சரோஜாதேவி, பானுமதி, MN ராஜம் பன்பதே சரியானதாகும்.
*தவறை தெரியப்படுத்திய வாசகரிற்கு நன்றி.*




**SNR OPTICAL**

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். *அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

* 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி - **FRAME CONSULTANT** (Robert Optician)

☎: (416) **332 9995**


## நான் வாழப் போகிறேன்



### சுவடு 29

**-வீணை மைந்தன்**

"சிவாஜி கணேசன் அவர்களுடன் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு மேலான பழக்கம் எனக்கு. இன்டஸ்ரியை எடுத்துக்கிட்டீங்கன்னா அவருடன் தான் அதிக படங்களில் நடித்திருக்கிறேன். அவருடைய கதாநாயகிகளுள் மிக அதிகமான படங்களில் கதாநாயகியாக நடித்த பெருமை எனக்கு மட்டும் தான் உண்டு". 52ல் முதல் முதலில் இருவரும் இணைந்து நடித்த படம் 'பணம்' கண்ணதாசன் தயாரிப்பில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இயக்கியது.



முதல் சீனில் எங்கள் இருவருக்கும் கல்யாணம் நான் மணமகள் வேஷத்தில் மாமனார் வீட்டிற்கு வருகிறேன். நிஜ வாழ்வில் அன்று தான் சிவாஜிக்குக் கல்யாணம். படப்பிடிப்பு முடிந்ததும் நேராகத் தன் நிஜக் கல்யாணத்திற்குச் சென்றார். இப்பவும் நாங்கள் சந்திக்கும் போது அதைச் சொல்லிச் சிரிப்போம். அதற்குப் பிறகு எத்தனையோ படங்களில் சேர்ந்து நடித்தோம். 86ல் கூட 'தாய்கொரு தாலாட்டு' 'லக்சுமி வந்தாச்சு' படங்களில் சேர்ந்து நடித்தோம். 'தில்லானா மோகனாம்பாள்' லே நடித்தது மறக்க முடியாத அநுபவம். 18 வயசுப் பெண் ரோல் அது. எனக்கு அப்ப 38 வயசு. அந்தப் பாத்திரத்துடைய வயசை நினைவு வைத்துக் கொண்டு நடிக்க வேண்டியிருந்தது. உடம்பை ஒல்லியாக்க வேண்டியிருந்தது. அந்த மாதிரி சமயத்திலே நமக்கு நம்ம வாழ்வே சொந்தமில்லை. தொழிலுக்கும் ரசிக ஜனங்களுக்கும் தான் அது சொந்தம் என்கிற எண்ணம் ஏற்பட்டது. டைரக்டர் ஏ.பி. நாகராஜன் எனக்கும் சிவாஜிக்கும் கதைக்கேற்ற மாதிரி போட்டி உணர்வு ஏற்படணும் என்று இரண்டு தனித்தனி கொட்டேஜ் (Cottage). கட்டினார். பத்மினி குருப் ஒரு காட்டேஜ் என்று யாரையார் மிஞ்சறாங்க பார்க்கலாம் என்கிற போட்டியை உருவாக்கினார். அதனால் தான் படம் வெற்றிப் படமாச்சு..", என்று 'நாட்டியப் பேரொளி பத்மினி' அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மொன்றியால் நகருக்கு வந்திருந்த வேளை எனக்களித்த நேர் காணலின் போது மனம் திறந்து உரையாடினார்.

'இப்போதும் கூட ஊருக்குப் போகிற சமயம் அவரைப் போய்ப் பார்ப்பதுண்டு. 'நலந்தானா' என்று விசாரித்துக் கொள்வேன் என்று சிரிப்புடன் கூறினார். அப்டியொரு சோடிப் பொருத்தம் அவர்களுக்கிடையில் சிவாஜி-பத்மினி என்றுதான் எல்லோரும் ஜோடிப் பொருந்தம் பேசுவார்கள்.

இவர்களுக்காகத் தான் தமிழ் சினிமா வளர்க்கப்பட்டதோ என எண்ணும் வண்ணம் சிவாஜி-பத்மினி இருவரும் தனி இராஜாங்கமே நடத்தினார்கள் என்று கூறும் அளவிற்கு பல வெற்றிப்படங்களில் இணைந்து புகழ் நாட்டினார்கள். இவர்கள் இருவரும் இணைந்த படங்களில் 'தங்கப்பதுமை' 'உத்தம புத்திரன்' 'அமர தீபம்' 'பாக்கியவதி' 'வியட்நாம் வீடு' 'மரகதம்' 'புதையல்' 'இருமலர்கள்' 'தில்லானா மோகனாம்பாள்' 'தெய்வப் பிறவி' ஆகியவை சிறந்த திரைச் சித்திரங்களாகும். பத்மினி அவர்களுடன் பல படங்களில் இணைந்தாலும் வேறு சில புகழ் பெற்ற கதாநாயகிகளுடன் ஓரிரு படங்களில் மட்டுமே சிவாஜி அவர்கள் நடித்துள்ளார். ஆனாலும் அப்படங்கள் கூட இன்றும் பேசக்கூடிய விதத்தில் கதையம்சம் பொருந்திய படங்களாக விளங்குகின்றன.

பழம் பெரும் நடிகை அஞ்சலி தேவியுடன் 'முதல் தேதி' யில் இணைந்தார். இந்த ஒரு படம் மட்டுமே சிவாஜி அவர்கள் அஞ்சலி தேவியுடன் நடித்தது. ஆனாலும் கூட 'முதல் தேதி' படம் இந்தக் காலத்திற்கும் ஏற்ற குணச்சித்திரப் பாத்திரப் படைப்பைக் கொண்ட படமாகும். புகழ் பெற்ற மனோகராவில் கிரிஜாவுடன் இணைந்தார். அதே போல் ஜி. வரலெட்சுமியுடன் 'வாழ்விலே ஓர் நாள்' 'நான் பெற்ற செல்வம்' ஆகிய இரு படங்களில் மட்டுமே இணைந்தார். நான் இங்கு குறிப்பிடுவது கதாநாயகி பாத்திரங்களை மட்டுமே. கதாநாயகிகள் சிலர் சகோதரிகளாகவும், தாயாகவும் கூட நடித்துள்ளார்கள்.




பொதுவாக சிவாஜி நடித்த சமூகப் படங்கள் மத்திய தரக் குடும்பப் பெண்களை கண்ணீர் விட்டு அழவைக்கும் பாத்திர படைப்புக் கொண்டவையாக அமையும். அந்த வகையில் மேற்கூறிய இரு படங்களும் இன்றைய பெண்களைக் கூட அழவைக்கும் உணர்ச்சி வசப்பட வைக்கும் தன்மையானதாகும்.

அரை நூற்றாண்டு கால திரையுலக வரலாற்றில் தலைமுறைக் கதாநாயகிகளுடன் இணைந்த பெருமையைக் கொண்டவர் நடிகர் திலகம் அவர்கள். நாற்பத்திமூன்று கதாநாயகிகளுடன் சோடி சேர்ந்தும் பத்மினி, கே.ஆர். விஜயா, சரோஜா தேவி, சௌகர் ஜானகி, தேவிகா ஆகியோருடனேயே அதிக படங்களில் இணைந்திருக்கிறார். சாவித்திரி, சுஜாதா நடிகையர் திலகம் சாவித்திரியுடன் பதினொரு படங்களில் இணைந்தாலும் திரைக் கதாபாத்திரங்களில் மிக உன்னதமான பாத்திரப் பிணைப்பாக அமைந்தது அந்த ஒரு படம் மட்டுமே...! அது ஒரு திரைக் காவியம் என்றே கூடப் பெருமைப்படலாம்.

*-கதாநாயகிகள் தொடர்கிறார்கள்...*


**RAAJ WATCH WORK**



சகல விதமான மணிக்கூடுகளும் **(Watch & Clock)** குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாபனம்.

**NATHAN ☎: (416) 265-5580**

2885 LAWRENCE AVE. EAST , BRIMLY/ LAWRENCE (Close to Biway)

கனடாவில் முதன்முதல் தலைவாழையிலை விருந்து படைத்தவர்கள்.



# கிராமத்து விருந்து

## தமது 5வது வருடத்தையொட்டி வழங்கும் விசேட விலைக்கழிவுகள்

## April 14 முதல் May 14 வரை

**Summer Parcel**

மரக்கறி பார்சல்
மீன்பார்சல்
ஆட்டுப்பார்சல்
கோழிப்புரியாணி
மாடு
கோழி

**$5.75**

இடியப்பம் எப்போதும் விசேஷ விலையில்

| | |
|---|---|
| 3 புட்டு Combo வாங்கினால் | 1FREE |
| 3 கொத்து ரொட்டி வாங்கினால் | 1FREE |
| 3 செற் இட்லி வாங்கினால் | 1FREE |
| 3 மசாலா தோசை வாங்கினால் | 1FREE |

**603 Kennedy Road,**
**Scarborough, Ont.**
**(416) 266-4240**
**(416) 424-2164**

**Kiramathoo Virunthoo**

1457 Gerred வீதியில் உள்ள கிளை தவிர வேறு கிளை கிடையாது

**1437 Gerrard Street**
**Toronto, Ont**
**(416) 405-9800**

# EASY WEIGHT LOST PROGAMME

## தமிழர் மத்தியில் முதன் முதல் அறிமுகம்

## இது ஒரு அமெரிக்க மூலிகை தயாரிப்பு

**Fast and Easy**

நீங்கள் மெலிந்த அழகுள்ள பெண்ணாக, ஆணாக திகழ வேண்டுமா?
கவலையை விடுங்கள்
உங்கள் பருமனை குறைக்க மிக இலகுவான வழி

**SATISFY YOUR HUNGER**
**BOOST YOUR ENERGY**
**AND**
**INDUE YOUR TASTE BUDS**

- ***NO FOOD DIETING***
- ***NO DRUGS***
- ***NO EXCERCISE***
- ***NO MONTHLY FEE***



1 மாதத்துக்குள்
15 இறாத்தலில் இருந்து
20 இறாத்தல் வரை
நிச்சயமாக குறைக்கலாம்.
பலன் இல்லையெனில்
பணம் திருப்பி தரப்படும்.

தொடர்புகளுக்கு
**Catha**
**416-405-9800**
**416-405-9760**

**30 DAY MONEY BACK GUARANTEED**

கனேடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

## சூரியக்குடும்பம் 7 — விண்வெளி

*தருபவர் - கனி*

சூரியனும், சூரியக்குடும்ப அங்கத்தவர்களும் சூரிய நெபுலாவில் இருந்து ஒரே காலத்தில் தோன்றினர் எனக் கூறினேன். இது நிகழ்ந்தது சுமார் 4.6 பில்லியன் வருடங்களின் முன்னர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். அதாவது சூரியனுக்கும், சூரியக் குடும்பத்திற்கும் ஆன வயது 4.6 பில்லியன் வருடங்கள் ஆகும். "பிக்பாங்" இற்குப் பின்னரான எமது பிரபஞ்சத்தின் வயது சுமார் 12 பில்லியன் வருடங்கள் ஆகும். எமது சூரியக் குடும்பம் எவ்வளவு வயது குறைந்தது என்று பார்த்துக் கொள்ளுங்கள். இன்று சூரியக் குடும்பத்தின கோள்களின் நிலைகளைச் சார்ந்த அமைப்புகளை முதலில் பார்ப்போம்.

முதல் நான்கு கோள்களும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையாகவும், அடுத்த நான்கு கோளங்களும் தம்முள் ஒரே மாதிரியானவையாகவும் காணப்படுகின்றன. இவை இரண்டு பகுதிகளுக்கு இடையில் குட்டிக் கிரகங்கள் காணப்படுகின்றன. இந்த குட்டிக் கிரகங்களுக்கு உள்ளே உள்ள தொகுதி உள் சூரியத் தொகுதி (Inner Solar System) எனவும் குட்டிக் கிரகங்கக்கு வெளியே உள்ள தொகுதி வெளி- சூரியத் தொகுதி (Outer Solar System) எனவும் அழைக்கப்படும். உள்-சூரியத் தொகுதியில் காணப்படும் கோள்களை "ரெரஸ்ரியல் கோள்கள்" (Terrestial Planets) எனவும் வெளி-சூரியத் தொகுதியில் காணப்படும் கோள்களை "யாவியன் கோள்கள்" (Jovian Planets) எனவும் கூறுவார்கள்.

முதலில் ரெரஸ்ரியல் கோள்களைப் பற்றிப் பார்ப்போம். இந்த ரெரஸ்ரியல் என்பது "பூமியைப் போன்ற" என்ற அர்த்தம் கொண்டது. எனவே பெயரின் அடிப்படையிலேயே இந்த ரெரஸ்ரியல் கோள்கள் என்பவை பூமியைப் போன்றவை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் என்ற இந்த நான்கு ரெரஸ்ரியல் கோள்களும் பாறை உலகங்கள் ஆகும். இவை அடர்த்தி கூடியவை. சூரியனில் இருந்து தூரம் அதிகரிக்க, அதிகரிக்க இவற்றின் அடர்த்தி குறைகின்றன. அடர்த்தி கூடியவை ஆகையால் இவை சிறியனவாக இருக்கின்றன. இவற்றில் பூமியும் செவ்வாயும் மாத்திரமே சந்திரன்களை (உப அல்லது துணைக் கோள்) கொண்டுள்ளன. பூமிக்கு ஒரு சந்திரனும், செவ்வாயிற்கு இரண்டு சந்திரன்களும் உள்ளன.

அடுத்து யாவியன் கோள்களைப் பற்றிப் பார்ப்போம். யாவியன் என்பது "யூப்பிரர் போன்ற" என்ற கருத்தாகும். அதாவது வியாழன் போன்ற கோள்கள் என நாம் கூறுவோம். இந்த வியாழன் போன்ற கோள்கள் அடர்த்தி குறைந்தவை. பெரியன வெறும் வாயு உலகங்கள் ஆகும். அதாவது அவை நமது பூமி போன்று திடவடிவில் இல்லாது வெறும் வாயுக்களின் திரட்சியானவை ஆகக் காணப்படும். இவற்றில் ஐதரசன் வாயும் ஈலியம் வாயும் பெருமளவில் காணப்படுகின்றன. வியாழனும், சனியும் பிரமாண்டமான திணிவுடையவை. வியாழனும், சனியும் முறையே பூமியைப் போல் 318 மடங்கு திணிவும் 95 மடங்கு திணிவும் உடையன. இந்த யாவியன் கோள்கள் பல சந்திரன்களையும் கொண்டுள்ளன.

புளூட்டோவானது ரெரஸ்ரியல் வகுப்பினும் யாவியன் வகுப்பிலும் அடங்காமல் தனித்துக் காணப்படுகிறது. வெறும் பனிக்கிரகமாகக் கருதப்படும் புளூட்டோவின் பருமன், திணிவு, அதன் சூரியனைக் கோளாக ஏற்க முடியுமா இல்லையா என்ற ஆய்வு ஒன்று விஞ்ஞானிகளிடையே நடைபெற்றது. பல நாட்களாக நடைபெற்ற அந்த ஆய்வின் முடிவுகளை அடுத்து புளூட்டோ சூரியனின் ஒரு கோளாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த வருடத்தின் பெப்ரவரி மாத நடுப்பகுதியிலேயேதான் உறுதியான இந்த முடிவை விஞ்ஞானிகள் வெளியிட்டார்கள்.

அடுத்து சூரியனின் கோள்கள் சூரியனில் இருந்து எவ்வளவு தூரத்தில் சூரியனை வலம் வருகின்றன எனப் பார்ப்போம். சூரியனின் கோள்களின் பாதை நீள்வட்டப் பாதை என்பதனால் சராசரித் தூரத்தையே பார்ப்போம். மேலும் இங்கு நான் தூரங்களுக்கான புதிய அலகு ஒன்றினை கூறுகின்றேன். பூமிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட சராசரித் தூரத்தை "ஒரு வானியல் அலகு" (Astronomical Unit) என்போம். (பூமிக்கும் சூரியனுக்கும் இடைப்பட்ட சராசரித் தூரம் $1.5 \times 10^8$ கிலோ மீற்றர் அல்லது 93,000,000 மைல்கள் ஆகும். எனவேஒரு வானியல் அலகு, ஒன்பது கோடியே முப்பது லட்சம் மைல்களுக்குச் சமனாகும்) வானியல் அலகின் அடிப்படையில் கோள்களின் தூரங்களை அவதானித்த பொழுது மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அத் தூரங்களிடையே ஓர் ஒற்றுமை அல்லது ஒழுங்கமைப்பு காணப்பட்டது. இதனை முதன் முதலில் அவதானித்துக் கூறியவர்கள் TITIUS என்பவரும் Bode என்பவரும் ஆதலினால் அதனை TITIUS - BODE RULE என்பார்கள். எந்தவிதமான பௌதீகக் காரணங்களோ அல்லது தர்க்கங்களோ இல்லாமல் வெறும் எண்களின் அடிப்படையிலான இந்த தொடர்பைப் பார்ப்போம்.


அன்பான வாசகர்களிற்கு

